# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly

தமிழ் மாத இதழ்

| | | | |
|---|---|---|---|
| மலர் : 8 | இதழ் :6 | மார்ச் : 2024 | ரூ.20/- |
| Volume: 8 | Issue : 6 | March : 2024 | Rs.20/- |




# SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14



# அஷ்டோத்ர ஸத சுக்ர வார ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்

**79வது பாராயணம் - 09.02.2024 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ அஷ்டபுஜ துர்க்காம்பிகை சன்னதி ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில்**

31, 4வது மெயின்ரோடு, நங்கநல்லூர், சென்னை - 61..

**80வது பாராயணம் - 16.02.2024 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ மெட்ராஸ் காளி பாரி திருக்கோயில்**

உமாபதி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33.

**81வது பாராயணம் - 23.02.2024 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ கமலாம்பிகை அம்மன் சன்னதி ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி திருக்கோயில்**

திருவாரூர்.

**82வது பாராயணம் - 01.03.2024 வெள்ளிக்கிழமை**

**ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ சவுந்தரேஸ்வரர் திருக்கோயில்**

பிராமின் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 15.

---

தங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ள ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளில் மண்டலி சார்பாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் செய்திட அனுக வேண்டிய எண்.

**9443495950, 9444060346**

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** - மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 55

**ந க[1]ர்மணா ந ப்[1]ரஜயா த[4]நேந த்[1]யாகே[3]நைகே[1]**
**அம்ருத[1]த்[1]வமாநஸு** :||

**பொருள் :**

*அழியாத நிலைப்பேற்றைசெயலாலோ ஸந்ததியினராலோ செல்வத்தாலோ அடைய முடியாது; த்யாகத்தாலேயே அதைப் பெறுகின்றனர்.*

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||*

# வேதபாரதி செய்திகள்
(ஆன்மீக மாத இதழ்)

மலர்: 8 இதழ்: 6

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 24-26
RNI No : 1282188
Title Code : TNTAM/2016/73726
R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)
Published on : 1-7th (1st Week) Every Month
TN/PM G (CCR) / WPP 605/24-26 /
Valid from 01.01.2024 to 31.12.2026

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,
செ - 42. போன்: 9025864231


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| உங்கள் சிந்தனைக்கு | 5 |
| அட்டைப்பட விளக்கம் | 7 |
| பங்குனி மாத விசேஷங்கள் | 11 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 12 |
| ஸ்ரீமத் பாகவதம் | 15 |
| மூதுரை (ஔவையார்) | 18 |
| ஆதிசங்கரர் | 19 |
| அறுபத்தி மூன்று நாயன்மார்கள் | 22 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 34 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 35 |
| தர்மத்தின் குரல் | 36 |
| பூக்களோடு பேசுவோம் | 39 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 42 |
| தருவின் நிழலில் | 46 |
| இராமாயணம் தரும் படிப்பினை | 49 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட
**VEDABHARATHI SEITHIGAL**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010246740**
**IFSC : CIUB 0000262**



நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**D. சூரியநாராயணன்**
**R. வெங்கட்ராமன்**
**K. சங்கர், S. ரகுநாத்**
**Cell : 94451 02193, 98402 01625**

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

## உங்கள் சிந்தனைக்கு....

## 6. நான்கு நற்பண்புகள்

எல்லோராலும் மனதில் எதையும் சிந்திக்காமல் இருக்க முடியாது. நாமே அப்படி இருக்க நினைத்தால் நம் மனதில் ஆயிரம் சிந்தனைகள் வந்து போகும். நாம் மற்றவர்களுடன் பேசும்போது வெறும் தத்துவத்தை மாத்திரம் பேசக்கூடாது. எல்லாவற்றையும் பற்றி கலந்து பேசவேண்டும். அப்போதுதான் அவருக்கு நம்மீது ஒரு ஆதரவு ஏற்படும்.

நாம் மற்றவர்களிடம் நம்முடைய சிநேகத்தை, நட்பை, அன்பை வெளிப்படுத்தினால் அவர்கள் அதை திருப்பி நம்மிடம் வெளிப்படுத்தமாட்டார்கள். அதனால் நாம் நான்குவிதமாக நம்முடைய சிநேகத்தை காட்ட வேண்டும் என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது.

1. நமக்கு சமமான மனதுடையவர்களிடம் நம் மனதில் உள்ளவற்றை அவரிடம் பங்கு வைத்தால் அவரும் அதை புரிந்துகொண்டு நம்மிடம் அதை திரும்ப கூறி இருவரும் சகஜமாக பேசலாம். அதாவது நாம் மற்றவர்களிடம் ஸ்னேஹ பாவத்துடன் அணுகவேண்டும். இதுதான் **“மைத்ரீபாவம்”.**

2. வயதில் முதிர்ந்தவர்கள் நம்மிடம் சமமாக பேசமாட்டார்கள். அவர்கள் கூறுவதுதான் உயர்ந்தது என்ற எண்ணம் வயது முதிர்ந்தவர்களுக்கு இருக்கும். அவர்களிடம் ஆதரவு காண்பித்து பேசி பழக வேண்டும். இதுதான் **“கருணா பாவம்”**

3. மூன்றாவது நம்மைவிட சிறியவர்கள், குழந்தைகள் அவர்களிடம் நாம் காருண்ய பாவத்துடன் பழகவேண்டும். அதாவது நல்லதை அவர்களிடம் பங்கு வைக்க வேண்டும். “இப்படி செய்வது கஷ்டம்” என்று அவர்களிடம் கூறுவதற்கு பதில் “இப்படி செய்தால்

அதன் பலன் எப்படி இருக்கும்?" என்று அவர்கள் மனம் புரிந்துகொள்ளும்படி பேசவேண்டும். அதற்காக தத்துவங்கள் கலந்த சிறிய சிறிய கதைகளை கூறவேண்டும். அப்போது அவர்களுக்கு நம்மிடம் ஆதரவு ஏற்படும். இது **"முதித"** பாவம்.

4. நான்காவதாக இருப்பவர் நம்மை கோபப்பட வைப்பவர்கள். அவர்கள் நம் மனைவியாகவும், கணவராகவும், சொந்தக்காரர்களாகவும் இருக்கலாம். மற்றவர்களின் குற்றம் குறைகளையே நம்மிடம் கூறுவார்கள். மற்றவர்கள் சொல்வதை கேட்கமாட்டார்கள். அவர்கள் நினைத்ததையே செய்வார்கள். இப்படிப்பட்டவர்களிடம் நாம் சற்று விலகியே இருக்க வேண்டும். இதற்கு **"உபேஷா பாவம்"** என்று பெயர்.

இந்த நான்கு பாவங்களை முறைப்படி கடைபிடிப்பவர்கள் உள்மனதில் (சித்தத்தில்) தெளிவும், சாந்தமும் பெருகும்.

தொகுப்பு : **D. சூரியநாராயணன்**

## வாழ்த்துக்கள்

19.02.2024 அன்று சென்னை, மேற்கு மாம்பலம்

காசி மண்டபத்தில்

ஸ்ரீமதி அபர்ணா - ஸ்ரீ மதுசூதனன் தம்பதியரின்

ஜேஷ்டகுமாரன்

**ஸ்ரீ கண்ட நரசிம்ம (எ) சங்கர்ஷனனுக்கு**

ப்ரும்மோபதேசம் செய்விக்கப்பட்டது.

மதுரை ஸ்ரீ முரளி அவர்களுடைய அக்கா பேரன்

வேதபாரதியின் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

# அட்டைப்பட விளக்கம்
# திருவாரூர் ஆழித்தேர்




**“தேர்”** என்பது **“நடமாடும் கோவில்”,** தேருக்கு அரி, இயந்திரம், இரதம், கவரி, குயவு, கூவிரி, கொடிஞ்சி, விமானம் என பல பெயர்களும் உண்டு.

**“தேரோட்டம்”** என்பது பல மதங்களிலும் பல தெய்வங்களின் சிலையையோ சின்னங்களையோ இதற்காக உருவாக்கப்பட்ட தேரில் வைத்து பலர் சேர்ந்து ஊர்வலமாக இழுத்துவரும் திருவிழாவாகும். முதியவர்கள், கோயிலுக்கு வர முடியாத நிலையில் இருப்பவர்களுக்கு தன்னை கண்ணார கண்டு தரிசிக்க வேண்டும் என்பதற்காக இறைவன் கோவிலை விட்டு வெளியே வந்து காட்சி தரும் திருநாள்தான் **“தேரோட்டம்”.** இந்தியா தவிர, இலங்கை, நேபாளம் ஆகிய நாடுகளில் உள்ள இந்து கோயில்களில் இடம்பெறும் ஆண்டு திருவிழாக்களில் மிக முக்கிய திருவிழாவாக அமைவது **“தேரோட்டம்”**

தமிழகத்தில் உள்ள கோவில்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோவில்களில் தேர்கள் உள்ளன. அவை அனைத்தும் அந்தந்த ஊரின் பெயரைச் சேர்ந்தே **“தேர்”** என்று அழைக்கப்படுகின்றன. உதாரணத்திற்கு **“தஞ்சாவூர் தேர்”.** ஆனால் திருவாரூர் தியாகராஜர் கோவிலில் உள்ள தேரை மட்டும் **“ஆழித்தேர்”**

*என்றுதான் அழைப்பார்கள். காரணம் அதற்கு பல சிறப்பு அம்சங்கள் உள்ளன.*

**“ஆழி”** *என்றால்* **“பரந்து விரிந்த” “அளவிட முடியாது”** *என்று பொருள். இதனால்தான் கடலுக்கு* **“ஆழி”** *என்ற பெயர்வந்தது. திருவாரூர் தேர் ஆசியாவிலேயே மிகப்பெரிய தேர். அளவிலும் அது மிகப்பெரியது. அதனால்தான் அதை* **“ஆழித்தேர்”** *என்று அழைக்கிறார்கள். இந்த தேர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே ஓடத் தொடங்கியது என வரலாறுகள் தெரிவிக்கின்றன.*

*திருநாவுக்கரசர் தம்முடைய தேவாரப் பதிகத்தில்* **“ஆழித்தேர் வித்தகனை நான் கண்டது ஆரூரே”** *என்று பாடியுள்ளார். இதிலிருந்து திருவாரூரில் கி.பி. 5-6 ஆம் நூற்றாண்டுக்கும் முன்பிருந்தே தேர் விருவிழா நடந்துள்ளது என்பது தெரியவருகிறது. மேலும் 1748 ஆம் ஆண்டு திருவாரூரில் ஆழித்தேரோட்டம் நடந்தது பற்றிய விவரங்கள் தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்தில் உள்ள ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.*

*சோழமன்னன் விக்ரம சோழன் காலத்தில் இந்த தேர் ஓடாமல் நின்று போனது. அதன்பின் திருவாரூர்* **“ருத்ர கணிகை”** *என்பவள் இதை ஓட வைத்தாள் என்ற தகவல் தல வரலாற்றில் உள்ளது.*

*1926 ஆம் ஆண்டு தேரோட்டத்தின்போது ஏற்பட்ட தீ விபத்தில் திருவாரூர் தேர் முழுவதும் எரிந்துவிட்டது. இந்த தேர் 2 நாட்கள் தொடர்ந்து எரிந்ததாக கூறுவர். அதன் பின் 1928 ஆம் ஆண்டு புதுதேர் உருவாக ஆரம்பித்து 1930 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ம் தேதி மீண்டும் புது தேர் ஓடியது. 1948 ஆம் ஆண்டோடு தேரோட்டம் முழுவதுமாக நின்றுவிட்டது. அதன்பின் 1970 ஆம் ஆண்டு தமிழக*

*அரசு மற்றும் வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியார் முயற்சியால் ஆழித்தேரோட்டம் நடைபெறத் தொடங்கியது.*

*தற்போது உள்ள ஆழித்தேர் ஏழு அடுக்குகளைக்கொண்டு 96 அடி உயரமும் 31 அடி அகலமும் சுமார் 300 டன் எடையும் கொண்டது. தேர் முற்றிலுமாக அலங்கரிக்கும் போது அதன் எடை 400 டன் கொண்டதாக இருக்கும். இது ஏழு அடுக்குகளைக் கொண்டது. அவற்றின் பெயர்கள்* **"பூதபார்", "சிறுஉறுதலம்", "பெரிய உறுதலம்", "நடகாசனம்", "விமாசனம்", "தேவாசனம்", "சிம்மாசன பீடம்"** *என்பன. இதில் நான்காவது நிலையில் ஸ்ரீதியாகராஜர் வீற்றிருப்பார்.*

*தேரை அலங்கரிப்பதற்கு பல டன்கள் எடை கொண்ட மூங்கில்களும், 5 டன் பனைமரக் கட்டைகளும், 50 கயிறுகளும், 500 கிலோ வண்ணத்துணிகளும் பயன்படுத்தப்படுகின்றன. தேர் அழகிய வண்ணம் தீட்டிய ஆலவட்டங்கள், தோரணங்கள் முதலியவற்றால் அலங்கரிக்கப்படும். தேரை இழுக்கும் வடம் 425 அடி நீளம் கொண்டது. தேரில் திருவிளையாடல் புராணம், சிவபுராணம், நாயன்மார்கள் வரலாறு போன்றவற்றைவிவரிக்கும் 400க்கும் மேற்பட்ட சிற்பங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தேரின் சக்கரங்கள் ஒவ்வொன்றும் 2.59 மீட்டர் விட்டம் கொண்டது. இதை திருச்சி பாரத மிகு மின் நிறுவனப் பொறியாளர்களைக் கொண்டு கையாளப்படுகிறது. தேரை நிறுத்துவதற்கு* **ஹைட்ராலிக் ப்ரேக்** *உபயோகப்படுத்தப்படுகிறது.*

*இந்த ஆழித்தேர் அசையும் போதெல்லாம்*

பக்தர்கள் கூட்டமாக ஈசனை **"ஆரூரா! தியாகேசா!!"** என்று வழிபடும் கூச்சல் விண்ணெங்கும் முழக்கமிட்டு மெய்சிலிர்க்க வைக்கும். தேரை வடம் பிடித்து இழுப்பதால் ஈசன் வசிக்கும் கைலாயத்தில் இடம் கிடைக்கும் என்று பக்தர்கள் நம்புகிறார்கள்.

இந்த வருடம் திருவாரூர் ஆழித்தேர் 21.03.2024 வியாழக்கிழமை (பங்குனி) ஆயில்யம் நட்க்ஷத்திரத்தில் நடைபெற உள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வாழ்க்கையில் ஒரு முறையாவது பார்க்கவேண்டிய **"பூலோக சொர்க்க விழா"** என்று திருவாரூர் ஆழித்தேரோட்டத்தை சொல்கிறார்கள்.

தொகுப்பு : **D. சூரியநாராயணன்**

## வாழ்த்துக்கள்

வேதபாரதியின் திருப்பாவை திருவெம்பாவை
பொறுப்பாளர்களில் ஒருவரான
ஸ்ரீ ஏ.எஸ். நாராயணன் - ஸ்ரீமதி ரஞ்சனி
தம்பதியரின் குமாரத்தி
**என். மீனாட்சி - கே.வினாயகமூர்த்தி** அவர்களின்
திருமண வரவேற்பு சென்னை, சேலையூர்
ஸ்ரீ பாலமுருகன் திருமண மஹாலில்
21.02.2024 மாலை நடைபெற்றது. தம்பதியினருக்கு
மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

## புதிய வேத வகுப்புகள் ஆரம்பம் (ONLINE)

வார இறுதி நாட்கள் மாலை இரவு 7.30 முதல் 9.00 மணி வரை ஸந்த்யாவந்தனம், சூக்தங்கள், ப்ரம்ஹஸ்ரீ கைலாச கனபாடிகள் குருஜி, கும்பகோணம்.

: **94434 95950**

## சோபக்ருது வருஷம் - பங்குனி மாத விசேஷங்கள்
### (மார்ச் 14.03.2024 முதல் ஏப்ரல் 13.04.2024 வரை)

| | | | |
|---|---|---|---|
| 14.03.2024 | பங் 1 | வியாழன் | காரடையான் நோன்பு |
| 15.03.2024 | பங் 2 | வெள்ளி | ஷஷ்டி, கார்த்திகை விரதம் |
| 20.03.2024 | பங் 7 | புதன் | ஏகாதசி |
| 21.03.2024 | பங் 8 | வியாழன் | திருவாரூர் ஆழித்தேர் |
| 22.03.2024 | பங் 9 | வெள்ளி | ப்ரதோஷம், காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆராதனை |
| 25.03.2024 | பங் 12 | திங்கள் | பௌர்ணமி, பங்குனி உத்திரம் |
| 28.03.2024 | பங் 15 | வியாழன் | சங்கடஹர சதுர்த்தி |
| 30.03.2024 | பங் 17 | சனி | அனுஷம் |
| 31.03.2024 | பங் 18 | ஞாயிறு | ஷஷ்டி |
| 05.04.2024 | பங் 23 | வெள்ளி | ஏகாதசி |
| 06.04.2024 | பங் 24 | சனி | சனிப்ரதோஷம் |
| 08.04.2024 | பங் 26 | திங்கள் | அமாவாஸை |
| 09.04.2024 | பங் 27 | செவ்வாய் | யுகாதி பண்டிகை |
| 11.04.2024 | பங் 29 | வியாழன் | கார்த்திகை விரதம் |
| 12.04.2024 | பங் 30 | வெள்ளி | சதுர்த்தி |

### 08.04.2024 திங்கட்கிழமை - அமாவாஸை

சோபக்ருது நாம ஸம்வத்ஸரே, உத்தராயணே சிசிரருதௌ, மீன மாஸே, க்ருஷ்ண பக்ஷே, அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர: வாஸரஸ்து இந்து வாஸர யுக்தாயாம் உத்ர ப்ரோஷ்டபதா / ரேவதி நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம்குண ஸகல விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 59

## அத்தியாயம் – 3

## கர்ம யோகம்

**தே$^{3}$வான் பா$^{4}$வயதானேன தே தே$^{3}$வா பா$^{4}$வயந்து வ/**
**பரஸ்பரம் பா$^{4}$வயந்த ஸ்ரேய பரமவாப்ஸ்யதம்$^{2}$//**

**(கீதை 3-11)**

**அனேன** = இந்த யக்ஞுத்தால் / **தேவான்** = தேவர்களை / **பாவயத** = வளரச் செய்யுங்கள் / **தே தேவா:** = அந்த தேவர்கள் / **வ:** உங்களை / **பாவயந்து** = வளர்க்கட்டும் / **பரஸ்பரம் பாவயந்த :** = ஒருவரையொருவர் வளர்த்து / **பரம்** = மேலான / **ஸ்ரேய :** = நன்மையை , **அவாப்ஸ்யத** = அடைகிறவர்களாவீர்கள்.

**பொருள் :** இந்த யக்ஞுத்தால் தேவர்களை வளரச் செய்யுங்கள். அந்த தேவர்கள் உங்களை பேணட்டும். பரஸ்பரம் பேணிப் பெரு நன்மை எய்துவீர்.

**விளக்கம் :** இந்த ஸ்லோகத்தின் எளிய பொருள் என்னவென்றால் மனிதர்கள் யாகங்கள் செய்து தேவர்களை மகிழ்வித்தால், தேவர்கள் மனிதர்களை மகிழ்விப்பார்கள். இங்கு **“தேவன்”** என்றசப்தத்திற்கு சூக்ஷ்மமான அர்த்தம் **“பிரகாசிக்கிறவன்”** என்று பொருள். அதாவது நம்மை நிலைநிறுத்துகிறவர். **“தீபம்”** என்றால் **“பிரகாசம்”** என்று தெரியும். இந்த **“தீபம்”** என்ற சப்தத்திலிருந்துதான் **“தேவன்”** என்றசப்தம் வந்தது. நாம் வாழ்வதற்கு காரணமாக இருப்பவர்கள் எல்லாம், உதவுகிறவர்கள் எல்லாம் தேவர்கள்தான். உதாரணம்

**"சூரிய தேவன்" "வாயு தேவன்". "வருண தேவன்" "பூமி தேவி",** சூரியன் பிரகாச ரூபத்தில் நம் கண்களில் இருக்கிறார். நாம் மூச்சு விடுவதில் வாயு இருக்கிறார். கைகளில் வருணன் இருக்கிறார். அதாவது நம்முடைய சரீரத்தில் ஒவ்வொரு அங்கத்திலும் "தேவன்" இருக்கிறார். அதாவது நம் இந்திரியங்கள்தான் **"தேவன்",** இந்த ஸ்லோகத்தில் **"தேவர்களை பேணுங்கள் தேவர்கள் உங்களை பேணட்டும்"** என்கிறார். அதாவது நம்முடைய இந்திரியங்களை நாம் வேண்டிய விதத்தில் ப்ரயோஜனப்படுத்தினால் அந்த இந்திரியங்கள் நம்மை சந்தோஷப்படுத்தும்.

நாம் இயற்கையை அழிக்காமல் பாதுகாத்தால் இயற்கை நம்மை வாழவைக்கும். அதனால்தான் **"பரஸ்பரம் பாவயந்த"** பரஸ்பரம் பேணிப் பெருந்தன்மை எய்துவீர்" என்கிறார். இதை பகவான் எதற்காக கூறுகிறார் என்றால், இயற்கையிடமிருந்து நாம் பின்வரும் அம்சங்களை கற்றுக்கொண்டு வாழவேண்டும்.

இயற்கை தனக்கென்று எதையும் செய்துகொள்வதில்லை. சூரியன் தனக்காக உதிப்பதில்லை. நதிகள் தமக்காக ஓடுவதில்லை. காற்று தனக்காக வீசுவதில்லை. இயற்கை எல்லோரிடமும் சமமாக உள்ளது. இயற்கை தன்னைத் தானே தினமும் புதுப்பித்துக்கொள்கிறது.

மரங்களில், செடிகளில் **"பூக்கள்"** பூக்கின்றன. மாலையில் வாடி உதிர்ந்துவிடுகின்றன. மறுநாள் காலை புதியதாக மலரும் பூ புத்துணர்ச்சியுடன் விளங்குகிறது.

இதிலிருந்து நாம் கற்க வேண்டியவை எவை?

நாம் ஓயாமல் வேலை செய்ய வேண்டும். **"நான் செய்கிறேன்"** என்ற அகம்பாவம் இன்றி

செய்யவேண்டும். செய்யும் செயல்களை தனக்காக அன்றி பிறருக்காகச் செய்யவேண்டும். எல்லோரையும் சமமாக பாவித்து சேவை செய்ய வேண்டும்.

பிறர்க்கு மனிதன் எதை எடுத்து வழங்குகிறானோ அதையே இயற்கையானது எடுத்துப் பன்மடங்கு அதிகமாக அவனுக்கு வழங்குகிறது. இப்படிப் பரஸ்பரம் பேணுதல் என்ற யாகத்தால் எல்லார்க்கும் நன்மையே வந்தமைகிறது.

பிறரைப் பேணாதவர்கள் யார்? அதற்கான விடை அடுத்த ஸ்லோகத்தில்.

கர்மயோகம் தொடரும்...

## வாழ்த்துக்கள்

வேதபாரதியின் திருப்பூர் புரவலர்

ஸ்ரீ டி. சிவக்குமார் - ஸ்ரீமதி தாக்ஷாயினி அவர்களின் குமாரன்

**அகிலேஷ் குமார் - ஹரிபிரியா** இவர்களின் திருமணம் 19.02.2024 அன்று சென்னை எம்.ஆர்.சி. நகரிலுள்ள மேயர் ராமநாதன் செட்டியார் சென்ட்ரல் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களுக்கு வேதபாரதியின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வேதபாரதியின் வேதவகுப்பு ஆசிரியர்

**ஆர்.ஸ்ரீனிவாச சர்மா,** கல்யாணபுரம் அவர்களுக்கும் **ஸ்ரீமதி வி.க்ருத்திகா (எ) விசாலாட்சி** அவர்களின் திருமணம் மதுரை திருப்பரங்குன்றம் நீலா க்ருஷ்ணமூர்த்தி மஹாலில் 22.02.2024 அன்று சிறப்பாக நடைபெற்றது. வேதபாரதியின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

# ஸ்ரீமத் பாகவதம்

*(ஸத்யம் பரம் தீமஹி)*

பரிதி பகுதி - 38

## ஸ்கந்தம் 4

## வானத்தில் உதித்த புதிய நட்க்ஷத்ரம்

## துருவ சரித்திரம்

*சென்றமாத தொடர்ச்சி...*

*துருவன் தன் தாயிடம் ஓடிவந்து விவரங்களைச் சொல்வதற்கு முன்பே தோழிகள் மூலம் அரண்மனையில் நடந்த சம்பவங்கள்.* **“ஸுநீதி”**க்கு *தெரிந்துவிட்டது. குழந்தை துருவன் வந்ததும் அவனை அள்ளிக்கொண்டு உள்ளே சென்று அவன் முகத்தைத் துடைத்து குழந்தையைப் பார்த்து கூறுகிறாள்.*

**மாமங்களம் தாத பரேஷுமம்ஸ்தா புங்க்தே ஜனோ யத் பரது : கதஸ்தத்// (பா 4-8-17)**

**பொருள் :** *குழந்தாய் பிறருக்கு கெடுதலை கருதாதே, ஏனென்றால் பிறருக்குத் தீங்கிழைக்கின்றமனிதன் அதை தானே அனுபவிக்கிறான்.*

*“துருவா, உன் சிற்றன்னை சரியாகத்தான் சொல்லியிருக்கிறாள். பாவியான என் வயிற்றில் பிறந்ததால்தான் உனக்கு இவ்வளவு கஷ்டம். நமக்கு பகவான் எப்போதும் அரணாக இருப்பார். மறந்தும் பிறர்க்குத் தீங்கு நினையாதே. மற்றவர்களுக்கு நாம் நினைக்கும் தீங்கு உண்மையில் நம்மையே அடைகிறது. நீ காட்டுக்குச் சென்று தவமிருந்து* **“ஆராதய அதோக்ஷஜ பாத பத்மம்” (பா 4-8-19) = பகவானின் திருவடித் தாமரைகளை பூஜிப்பாயாக** *பகவான் உனக்கு எப்போதும் துணையிருப்பார்” என்று கூறி குழந்தையைக் கட்டியணைத்து உச்சிமோந்து திலகமிட்டாள்.*

சிற்றன்னையின் கொடுஞ்சொற்களால் புண்பட்ட துருவன் தாயின் சொல் கேட்டு கண்களைத் துடைத்துக்கொண்டு தீரனாகக் காட்டிற்கு கிளம்பினான்.

ஒருவன் தூய்மையான மனத்துடன் உண்மையாக இறைவனைத் தேடுவானாகில் அவனை ஆட்கொள்ள ஒரு உத்தம ஸத்குருவை இறைவன் அனுப்புவார். அதுபோல் துருவன் இறைவனைத் தேடி காட்டிற்கு கிளம்பி செல்லும்போது பூமிக்கு வந்த நாரதர் ஸஞ்சாரம் செய்து கொண்டிருந்த சமயம் குட்டிக் குழந்தை துருவனைக் கண்டார். தன்னுடைய ஞான த்ருஷ்டியால் அவன் யார் என்பதை அறிந்துகொண்டார். துருவனது குறுக்கே வழியை மறைத்து நின்றார்.

நெடிய உயரம், அமைதி ததும்பும் புன்னகைத் திருமுகம், நீண்ட கைகள், சிவந்த திருமேனி, தோளில் **“மஹதி”** என்னும் வீணை, கழுத்தில் தாமரை மாலை, தன்னை வழி மறைத்தது நாரதர் என்பதை அறிந்துகொண்டான் துருவன். அவருடைய கால்களில் விழுந்து நமஸ்கரித்தான்.

வாஞ்சையுடன் குழந்தையின் தலையைத் தடவிய நாரதர் “குழந்தை, உத்தானபாத மஹாராஜாவின் பையன் துருவன்தானே நீ? நீ எங்கே போகிறாய்?”

“பகவானைப் பார்ப்பதற்காக தபஸ் செய்ய காட்டிற்கு போகிறேன்”

“குழந்தாய் காட்டில் துஷ்ட மிருகங்கள் இருக்கும். சின்ன சின்ன பூச்சிகள் இருக்கும். உன்னால் தூங்கக்கூட முடியாது. இங்கேயெல்லாம் நீ வரக்கூடாது”

“அதெல்லாம் எனக்கு தெரியாது. என் சித்தி

என்னை அவமானப்படுத்திவிட்டாள். அதனால் காட்டிற்குப் போய் தவமிருந்து பகவானை பார்க்கப்போகிறேன்". குனிந்த தலை நிமிராமல் டாண் டாண் என்று பதில் அளித்தான் துருவன்.

குழந்தை துருவன் கூறியதைக் கேட்ட நாரதர் மிகவும் மகிழ்ந்து "குழந்தாய் உன்னைக் கண்டு எனக்கு மிக்க மகிழ்ச்சியாய் இருக்கிறது. பரிசுத்தமான யமுனைக் கரையில் மதுவனம் என்றஇடம் உள்ளது. (தற்போதைய "மதுரா", ஸ்ரீகிருஷ்ண ஜென்ம பூமி) அங்கு பகவான் ஹரி நித்யவாஸம் செய்கிறார். அங்கு சென்று யமுனையில் மூன்று வேளை நீராடி, மனதை அலையவிடாமல் ஒரு ஆசனத்தில் நிலையாக அமர்ந்து ப்ராணாயாமம் செய்து மனதின் மாசுகளை நீக்கி ஸ்ரீமன் நாராயணனை தியானம் செய்" என்று கூறி துருவனின் வலது காதில் **"ஓம் நமோ பகவதே வாசுதேவாய"** என்று **"துவாதசாக்ஷரி"** மந்திரத்தை உபதேசம் செய்தார்.

நாரதர் கூறியதைக் கவனத்துடன் கேட்டுக்கொண்ட துருவன் அவரை மூன்று முறைவலம் வந்து அவர் காலடியில் விழுந்து நமஸ்கரித்து மதுவனத்தை நோக்கி நடக்கத் துவங்கினான்.

தொடரும்...

ஸ்ரீ கோடிகாயத்ரீ ஜப யக்ஞம் வேலூர் கணேசவாத்தியார் அவர்கள் தலைமையில் பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு வேலூர், சேம்பாக்கம், ஸ்ரீ இராகவேந்திர ஸ்வாமி, ப்ருந்தாவனத்தில் 03.03.2024 அன்று விமரிசையாக நடைபெற உள்ளது. ஸ்ரீ கணேச வாத்தியார் அவர்களுக்கு வேதபாரதியின் பணிவான நமஸ்காரங்கள்.

# ஔவையார்
# "மூதுரை"

***"மூதுரை"*** *= முதுமை + உரை = மூதுரை பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பதால்* ***"மூதுரை"*** *என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மொத்தம் 30 வெண்பா பாடல்கள் அமைந்துள்ளன.*

## வெண்பா 18

**சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்; மற்று**
**அல்லாதார் கெட்டல் அங்கு என்னாகும்? சீரிய**
**பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகும்; என் ஆகும்**
**மண்ணின் குடம் உடைந்தக்கால்?**

**பொருள் :** *தங்கத்தால் ஆன பானை உடைந்து சிதறினால் அதன் சிதறலும் தங்கமே. ஆனால் மண்பானை உடைந்து போனால்? மண்தான் அதைப் போன்றதே சிறந்த பண்புடையவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உண்டாகும் தாழ்வும்.*

**விளக்கம் : "சீரியர்"** *என்றால்* **"சான்றோர்"** *என்று பொருள். சான்றோரின் பெருமை எந்த நிலையிலும் குறையாது. அவர்கள் செல்வத்தால் உயர்ந்து இருக்கும்போதும், தாழ்ந்து இருக்கும் போதும் அவர்களுடைய பெருமை குறைவதில்லை என்பதை விளக்கவே இந்த பாடலை ஒரு சிறந்த உவமையுடன் பாடியிருக்கிறார் ஔவை பாட்டி.*

*ஒரு குடம் பொன்னால் (தங்கத்தால்) ஆனதாக இருந்தாலும் மண்ணால் ஆனதாக இருந்தாலும் அவை உடைந்துவிட்டால் தண்ணீர் பிடிக்க முடியாது. ஆனால் பொன்னால் ஆன குடம் உடைந்தாலும் அதன் மதிப்பு குறைவதில்லை. காரணம் பொன்குடத்தின் மதிப்பு பொன்னால் வருகிறது. அதுபோல் செல்வ நிலையிலிருந்து சான்றோர்கள் தாழ்ந்தாலும் அவர்களின் மதிப்பு குறைவதில்லை. காரணம் அவர்களின் மதிப்பு அவர்களுடைய உயர்ந்த பண்பால் வருகிறது.*

*தொகுப்பு :* **பரிதி**


*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*

**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,**

*வேளச்சேரி*

*அத்வைத ஆசான்*

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன்** **அத்தியாயம் — 12** **பகுதி 29**

## திவ்ய சந்திப்பு

*ஸ்ரீ சங்கரர் தன் சிஷ்யர்களுடன் உத்திரகாசியை அடைந்தார். அப்போது அவருக்கு பதினாறு வயது முடிந்திருந்தது. அவர்கள் சிறிது காலத்திற்கு பயணத்தை நிறுத்தி வைத்தனர். ஸ்ரீ சங்கரர் கங்கா தீர்தத்தில் ஒரு குகையில் தங்கி, ஸ்நானம், ஸந்த்யாவந்தனம் முதலிய எந்த வெளி விஷயங்களும் இல்லாமல் பெரும்பாலும் சமாதி நிலையிலேயே இருந்தார். அவருடைய ஏகாந்தத்தை யாரும் கலைக்கவில்லை.*

*பத்மபாதரும், சித்ஸுகரும் ஸ்ரீ சங்கரரின் பிதாவாகிய சிவகுருவிற்கு கிடைத்த வரத்தின்படி ஸ்ரீ சங்கரருடைய ஆயுளைப் பற்றி எண்ணி சிறிது மனக்கலக்கமுற்றனர். ஸ்ரீ சங்கரரின் இந்த நிலை பல நாட்கள் தொடர்ந்தது.*

*ஒரு நாள் இரவு வேளையில் வயதான ஒரு பிராமணர் ஸ்ரீசங்கரர் இருந்த குகைக்கு வந்தார். அவரைக் கண்டதும் சிஷ்யர்கள் அபிவாதனம் செய்தார்கள். அந்த பிராமணர் "இங்கு யாரெல்லாம் தங்கியிருக்கிறீர்கள்?" என்று கேட்க அதற்கு பத்மபாதர் "நாங்களும் எங்கள் ஆசாரியர் ஸ்ரீ சங்கரரும் தங்கியிருக்கிறோம். அவர் ப்ரும்ம ஸூத்திரத்திற்கும், உபநிஷத்துக்கும் பாஷ்யம் எழுதியிருக்கிறார்" என்றார். அதைக்கேட்ட அந்த பிராமணர் ஓ ப்ரும்ம ஸூத்திரத்திற்கே பாஷ்யம் எழுதியிருக்கிறாரா? அவரை நான் பார்க்க வேண்டுமே" என்றார். அதற்கு பத்மபாதர் "அவர் பல நாட்களாக நிஷ்டையில் இருக்கிறார்"*

*என்றார். "அப்படியா? அவரை நான் பார்க்க வேண்டுமே" என்று அந்த பிராமணர் கூற அவரை குகைக்குள்ளே அழைத்து போனார்கள். அவர் உள்ளே போனவுடன் ஸ்ரீ சங்கரர் நிஷ்டையிலிருந்து எழுந்து அந்த பிராமணரைப் பார்த்து வணங்கினார். பதிலுக்கு அந்த பிராமணரும் வணங்கினார். இருவரும் அமர்ந்தார்கள்.*

*அந்த பிராமணர் ஸ்ரீ சங்கரரைப் பார்த்து* **"நீங்கள் வியாஸரின் ப்ரம்ம ஸூத்திரத்திற்கே பாஷ்யம் எழுதியிருப்பதாக கேள்விப்பட்டேன். எனக்கு கேட்க வேண்டும் என்று மிகவும் ஆர்வமாக இருக்கிறது"** *என்றார். அதற்கு ஸ்ரீசங்கரர் "நான் சூத்திரங்களில் வல்லவன் அல்ல. தாங்கள் என்னிடம் கேள்வி கேட்டால், நான் அறிந்தவரை பதில் அளிக்க முயற்சிக்கிறேன்" என்றார்.*

*அந்த பிராமணர் ப்ரும்ம சூத்திரத்தின் மூன்றாவது அத்தியாயத்திலிருந்து முதல் சூத்திரமான* **"ததந்தரப்ரதிபத்தௌ ரம்ஹதி ஸம்பரிஷ்வக்த : ப்ரஸ்நநிரூபணாப்4யாம்"** *= மரணத்திற்கு பிறகு இந்த ஜீவனுடைய கதி என்னவாகிறது? எங்கே போகிறது? என்று கேட்கிறார். அதற்கு ஸ்ரீசங்கரர் "ஸ்வாமின், இந்த ஜீவன் தன் கர்மவாஸனைகளுடன் அன்யயோனிக்குச் செல்கிறது. ஸ்வரூபஞானம் அடையும்வரையில் மறுபிறவி இல்லாமல் இல்லை" (கடோபநிஷத்) என்று நீண்ட விளக்கம் அளிக்கிறார். இவ்வாறாக இருவருக்குமான ஸம்வாதம் தொடர்ந்து பத்து நாட்களுக்கும் மேலாக நடந்தது. அந்த ப்ராமணரின் எல்லா கேள்விகளுக்கும் ஸ்ரீசங்கரர் பவ்யமாக பதில் அளிக்கிறார். இந்த இருவருக்குமான ஸம்வாதத்தை பத்மபாதர் பார்த்துக்கொண்டே இருந்தார். அவருக்கு*

*வந்திருப்பது சாதாரண ப்ராமணர் அல்ல அவர் சாக்ஷாத் வியாஸபகவானே என்று தெரிந்துவிட்டது. ஸ்ரீசங்கரர் பத்மபாதரை அழைத்து "எங்கள் உரையாடலைப் பற்றி என்ன கூறுகிறாய்? என்று கேட்டார் அதற்கு பத்மபாதர்.*

**ஸங்கர : ஸங்கர : ஸாக்ஷாத் வ்யாஸோ நாராயண: ஸ்வயம்/**

**தயோர்விவாதே ஸம்ப்ராப்தே கிம்கர : கிம்கரோம்யஹம் //**

**"சங்கரன் ஸாக்ஷாத் சங்கரனே. வியாஸனோ ஸ்வயம் நாராயணனே.**

**உங்கள் இருவருக்குள்ளும் ஸம்வாதம் செய்யும் போது தாஸன் மட்டுமான நான் என்ன கூற முடியும்?** *என்று கூறி இருவரையும் நமஸ்கரித்தார்.*

*இதைக்கேட்ட அந்த ப்ராமணர் ஸ்ரீசங்கரருக்கும் பத்மபாதருக்கும் வியாஸபகவானாக தரிசனம் கொடுத்து, ஆசீர்வதித்து ஸ்ரீ சங்கரரை பார்த்து "தாங்கள் லோகஸங்க்ரஹத்திற்காக மேலும் பதினாறு வருஷங்கள் உலகில் ஸஞ்சாரம் செய்ய வேண்டும். தாங்கள் இங்கிருந்து பிரயாகம் சென்று குமாரிலபட்டர் என்ற மீமாம்ஸகரைக் காணவேண்டும்" என்று கூறிவிட்டு தண்டத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். ஸ்ரீ சங்கரரும் மற்ற சிஷ்யர்களும் எழுந்து ஸ்ரீ வியாஸருக்கு வந்தனம் செய்தனர்.*

*தொடரும்.....*

*ஊரப்பாக்கம் ஸ்ரீ சங்கர வித்யாலாவில்* **11.02.2024 ஞாயிறு** *அன்று காலை 9.30 மணி முதல் 11.30 மணிவரையில் காமாக்ஷி அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தில் வேதபாரதியின் உறுப்பினர்களால் ருத்ர பாராயணம் சிறப்பாக நடைபெற்றது. 35 ரித்விக்குகள் கலந்துகொண்டார்கள்.*

**அறுபத்தி மூன்று (63) நாயன்மார்கள்**

*அருணன்* *15/63*

## 15. திருநாளைப்போவார் நாயனார்

*(புரட்டாசி - ரோகிணி)*

*மயிலாடுதுறைக்கு கிழக்கே 3 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.* **“மேலாதனூர்”** *(ஆதனூர்). இந்த ஊரில் பிறந்தவர்* **“நந்தன்”.** *இவர் தாழ்த்தப்பட்ட இனத்தில் பிறந்தவராக இருந்தாலும் பிறந்து உணர்வு வந்தது முதல் சிவ பெருமானை தன் நெஞ்சிலே உயர்ந்த இடத்தில் வைத்து வணங்கிவந்தார்.*

*இவருடைய தொழில் கோயில் முரசுகளுக்கு தோல் தைத்து கொடுப்பது, யாழ்களுக்கு நரம்பு செய்து தருவதுதான். அதில் கிடைக்கும் பணத்தை தனக்கு இல்லாமல் சிவாலய திருப்பணிக்களுக்கே செலவு செய்வார். அவர் தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்ததால் அவரை கோயிலுக்குள் அனுமதிக்க மறுத்தார்கள். அதனால் அவர் தான் கொண்டுவந்த பொருட்களை கோயில் வாயிலின் முன் நின்றபடியே கொடுத்துவிட்டு அங்கேயே நின்றபடி கோயிலை பார்த்து பார்த்து இன்புறுவார்.*

*நந்தனுக்கு திருப்புன்கூரில் உள்ள சிவபெருமான்* **“சிவலோகநாதரை”** *தரிசிக்க வேண்டும் என்று நீண்ட நாள் ஆசையாக இருந்தது. ஒரு நாள் திருப்புன்கூர் சென்ற நந்தன் கோயிலுக்குள் நுழைய முடியாததால் தேரடியில் நின்றுக்கொண்டே இறைவனை தரிசிக்க முற்பட்டான். ஆனால் கோயில் வாசலில் பெரிய நந்தி இருந்ததால் சிவனை தரிசிக்க முடியவில்லை. அவன் அங்கே நின்றபடியே “அப்பனே உன்னை*

காணவிடாமல் மாடு குறுக்கே நிற்கிறதே” என்று கூறி கலங்கினான். அப்போது “சிவலோக நாதன்” தன் நந்தியைப் பார்த்து “சற்றே விலகியிரும் பிள்ளாய், நம் சந்நிதானம் மறைக்குதாம்” என்று கூறினாராம். நந்தியும் அப்படியே விலகிக்கொள்ள நந்தனுக்கு சிவ தரிசனம் கிடைத்தது.

(இன்றும் திருப்புன்கூர் சிவலோக நாதன் ஆலயம் சென்றால் சந்நிதிக்கு வெளியே நந்தி வடபக்கம் விலகி வழி மறையாதிருப்பதைக் காணலாம்)

நந்தனுக்கு சிதம்பரம் சென்று நடராஜரை தரிசிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. இதை எல்லோரிடமும் சொல்லி வந்தார். யாராவது “எப்போது நீ சிதம்பரம் செல்வாய்?” என்று கேட்டால் **“நாளை போவேன்”** என்று அப்பாவியாக சொல்லுவார். பல நாட்கள் இப்படியே அவர் கூறிவந்ததால் மக்கள் அவரை **“திருநாளைப் போவார்”** என்றே அழைத்தனர். நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் நந்தனுடைய முதலாளி நந்தனுக்கு சிதம்பரம் செல்ல பணம் உதவினார்.

நந்தன் மிகவும் ஆவலுடன் சிதம்பரம் சென்றார். ஆனால் ஊருக்குள் செல்ல தயங்கி ஊர் எல்லையிலிருந்தே சிதம்பரம் கோயில் கோபுரத்தை தரிசித்து பெருமகிழ்ச்சி அடைந்தார். ஊர் எல்லையை சுற்றி சுற்றி வந்த அசதியில் அப்படியே தூங்கிவிட்டார். ஈசன் அவர் கனவில் தோன்றி **“இப்பிறவி ஒழிய நீ தீயினில் மூழ்கி தில்லை வாழ் அந்தணர்களுடன் என்னை வந்தடைவாயாக”** என்று கூறினார். அதே நேரத்தில் தில்லைவாழ் அந்தணர்களின் கனவிலும் நடராஜப் பெருமான் தோன்றி **“நம் அடியவன் “திருநாளைப் போவார்” வந்திருக்கிறார். ஊருக்கு வெளியே**

**தங்கியிருக்கிறார். சிறப்புகள் பல செய்து அவரை நம்மிடம் அழைத்துவாருங்கள்"** என்று கூறினார்.

மறுநாள் தில்லைவாழ் அந்தணர்கள் எல்லோரும் ஒன்று கூடி நந்தன், **(திருநாளைப் போவார்)** இருக்கும் இடத்தை தேடி அவரை அழைத்தார்கள். நந்தன் கேட்டுக்கொண்டது போல் கோயில் திருமதிலின் தெற்கு வாயிலுக்குப் புறத்தே தீக்குழி அமைத்துக் கொடுத்தார்கள். அந்த தீ குண்டத்தில் நந்தனார் கவலையின்றி **"திருச்சிற்றம்பலம்"** என ஈசனை நினைத்தவாரே இறங்கினார். பிறகு தண்ணீர் குளத்தில் இருந்து எழுந்து வருவதுபோல் தெய்வீக தோற்றத்துடன் வெளிப்பட்டார். கோயிலுக்குள் நுழைந்து கருவறையின் முன்னதாக நின்று நடராஜப் பெருமானை கண்குளிர கண்டு கருவறைக்குள் நுழைந்தார். அடுத்த நிமிடம் தீப்பிழம்பு தோன்றியது. நந்தனார் ஒரு பெரும் ஜோதியாக இறைவனுடன் ஐக்கியமானார்.

புறத்திலே முனிவராகவும் அகத்திலே புலையராகவும் பலர் இவ்வுலகில் உள்ளார்கள்.



அவர்களுக்கு இறைவன் அருள் எளிதில் கிடைப்பதில்லை. அகத்திலே முனிவராகவும் புறத்திலே புலையராகவும் இருந்தார் நந்தனார். இறைவன் அவரை தன் திருவடியில் உறையும்படி செய்தார்.

இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பது தூய்மையான அன்பையும் பக்தியையும், சேவையையும் மட்டும்தான். அவர் யாரையும் எந்த ஜாதி மதம் என்று பிறப்பிலே பேதம் பார்ப்பதில்லை. நாம் தெய்வத்தின் குழந்தைகள் என்ற ஆணித்தரமாக நம்பிக்கையுடன் இறைவனை நினைத்தால் எல்லா கஷ்டங்களும் பனிபோல் விலகும்.

நாயன்மார்கள் கதை தொடரும்......

**வேதபாரதி**
**வங்கி கணக்கு எண்கள் விபரம்**

| | | |
|---|---|---|
| Account No | : | 510909010005286 |
| | | Current Account |
| IFSC Code | : | CIUB0000262 |
| Bank | : | City Union Bank |
| Branch | : | Velachery |

**குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும்**
**ஸ்லோக வகுப்புகள் ஆன்லைன் மூலமாக**
ஆசிரியர் : ஸ்ரீ முரளிதரன்,
ஸ்ரீமதி நீலா முரளி, மதுரை
தொடர்புக்கு : **9443489129**

# ஏன்? எதற்கு? தெரிந்துகொள்வோம்



**3. "சிம்மாசனம்" என்று எப்படி பெயர் வந்தது.**

*அரசர்கள் (ராஜாக்கள்) ராஜசபையில் உட்காரும் ஆசனத்திற்கு* **"சிம்மாசனம்"** *என்று பெயர். இந்த பெயர் எப்படி வந்தது?*

**விடை :** *அந்த காலத்தில் அரசர்கள் ராஜசபையில் உட்கார்ந்து ஆட்சி செய்யும் இருக்கைக்கு* **"நிருபாசனம்"** *(ராஜா ஆசனம்) என்றுதான் பெயர்.* **"நிருபன்"** *என்றால்* **"ராஜா"** *என்று பொருள்.*

*பக்த பிரஹலாதனுக்கு அருள் புரியவும், அவனுடைய தந்தையான இரண்ய கசிபுவிடமிருந்து இந்த உலகத்தை காப்பாற்றவும் பகவான் நரசிம்மர் தூணிலிருந்து அவதாரம் எடுத்தார். இரண்யகசிபுவை வதம் செய்தபின் பகவான் அவனுடைய ஆசனத்தில் அமர்ந்துகொண்டு, பிரஹலாதனை தன் மடியில் அமர்த்திக்கொண்டு அவனுக்கு பட்டாபிஷேகம் செய்துவைத்தார். அப்போது பிரஹலாதன் பகவானிடம் "பகவானே அரசர்கள் எதில் அமர்ந்து ஆட்சி செய்வார்களோ, அந்த இருக்கைக்கு* **"நிருபாசனம்"** *என்று பெயர். ஆனால் இன்று முதன் முறையாக சிங்கமாகிய தாங்கள் அதில் அமர்ந்துள்ளீர்கள். எனவே இன்று முதல் அரசர்கள் உட்காரும் ஆசனத்திற்கு உங்களது பெயரால்* **"சிம்மாசனம்"** *என்று அழைக்கப்படும் என்றான்.*

*நமது தர்மம் பல உண்மையான அர்த்தங்களை உள்ளடக்கியது.*

**-பகலவன்**



**V.S. Venkateswaran,** B.Sc., MBA (Finance)
Financial Consultant
Cell : 94876 09116 / 63804 40194
Email : venkatsakthi7547@gmail.com

**SERVICE PROVIDED**

**Life Insurance :**
- Child Plan
- Annuity Plan
- Money back plan
- Savings Plan
- Term Insurance

**General Insurance :**
- Two Wheeler Insurance
- Four Wheeler Insurance

**Health Insurance :**
- Family Plan
- Senior - Citizen Plan
- Personal Accident

**Housing Loan :**
- Plot Loan
- Purchase of new built house
- Takeover Loans
- Purchase of Second - Hand Sale

**Mutual Fund :**
- SIP - Systematic Investment Plan
- One time Investment
- NCD Bonds
- Pan Card Service



Address
"Sai Prem" No.18, 3rd Cross Vasan Nagar,
Lawspet, Puducherry - 605 008.

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,
சென்னை - 600 042.



- 800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.
- சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.
- உறவினர்கள் தங்க - குளிருட்டப்பட்ட அறைகள்.
- விசாலமான கார் பார்க்கிங்.
- வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.
- நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.
- 24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.

தொடர்புக்கு

**48625585 / 9840545585**


வேதஸ்ரேணி
Mini Function Hall (A/C)
Traditional Ambience with Modern Amenities
Ayush Homam | Upanayanam | Birthdays | Engagement |
Sangeeth | Mehendi | Wedding | Valakaapu | Seemandham |
Shastiapthapoorthi | Sathabhishekam | Corporate Events
Ac Hall & Dining | Lift | Power Back Up | Car Parking |
CCTV | Hall Capacity- 150 -200 | Guest Rooms-2
Vedashreni, No 215, 3rd Street, Ramnagar Vijayanagar, Velachery, Chennai-42
95002 67471 | 98414 46897
VEG FOOD ONLY


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Shri Meera Labs Pvt Ltd
Contact
9952972436 / 7824807801
WOPPER


உ
திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள்
ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில்
அனுப்புதல் வேண்டும்.
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940

# மஹிமையான பொருட்கள்



**2. சாளக்ராமம்**

சென்றமாத தொடர்ச்சி...

நேபாளத்தில் கண்டகி நதி பகுதியில் உள்ள ஸ்ரீ முக்திநாத் க்ஷேத்திரத்தை **"ஸாளக்ராமம்"** என்பார்கள். இந்த க்ஷேத்திரம் 108 திவ்ய க்ஷேத்திரங்களில் ஒன்றாகும். இங்கு கருவறையில் உள்ள ஸ்ரீ முக்தி நாராயணன் ஸாளக்ராம சுயம்பு திருமேனியாக தரிசனம் தருகிறார். இவர் தம்மை தரிசிப்பவர்களுக்கு முக்தி அளிப்பதால் இவரை **"முக்திநாராயணன்"** என்று அழைக்கிறார்கள்.

ஸாளக்ராமங்களை வீட்டில் வைத்து பூஜை செய்யும் போது அதற்கான நியமங்களை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும்.

இரண்டு ஸாளக்ராமங்களை வைத்து பூஜை செய்யக்கூடாது. ஆனால் 4,6,8,10,12 என்ற இரட்டைப்படையில் வைத்து பூஜிக்கலாம். அதேபோல் ஒரு ஸாளக்ராமத்தை வைத்து பூஜிக்கலாம். ஆனால் 3,5,7,9,11 என்றஒற்றைபடையில் பூஜிக்ககூடாது. அதாவது இரண்டு அல்லது மூன்று கூடாது.

ஸாளக்ராமங்களுக்கு தினமும் தூய்மையான ஜலத்தாலும், சுத்த பசும்பாலாலும் அபிஷேகம் செய்ய வேண்டும். அப்படி அபிஷேகம் செய்யும் போது **"புருஷசூக்தம்"** ஜபிக்க வேண்டும். அப்படி பூஜை முடித்தபின் அந்த அபிஷேக ஜலத்தை கீழ்க்கண்ட மந்திரத்தைச் சொல்லி தலையில் தெளித்துகொள்ள வேண்டும்.

**"ஆஜன்மக்ருதம் பாபானாம் ப்ராயச்சித்தம் யயிச்சதி சாலிக்ராம ஷிலாவாஹி பாபஹரி நமோஸ்துதே"**

பொருள் : ஸாளக்ராமத்தால் கழுவப்பட்ட தீர்த்தமே உனக்கு வணக்கம். ஆஜன்ம பரியந்தம் விளைந்த சகல பாபங்களையும் நிவர்த்தித்துக்கொள்ள விரும்புவோருக்கு நீ சகல பாபங்களையும் போக்குகிறாய். (பவிஷ்யோத்ர புராணம்)

ஸாளக்கிராம அபிஷேக ஜலத்தை கீழே கொட்டக்கூடாது. பூஜை செய்ய முடியாத நாட்களில் ஸாளக்ராமங்களை அரிசியில் புதைத்து வைக்க வேண்டும்.

ஸாளக்கிராமத்தின் மஹிமையைப்பற்றி சிவபெருமானே பின்வருமாறு கூறுகிறார்.

"எனது லிங்கஸ்வரூபத்தினை கோடிகளில் காண்பதிலும், பூஜிப்பதிலும் உண்டாகும் புண்ணியம் ஸாளக்ராமம் ஒன்றைப் பார்த்தாலும் அர்ச்சித்தாலும் ஏற்படும் புண்ணியத்திற்குச் சமம்.

ஸாளக்ராமம் வைத்து வழிபடுகின்றவீட்டில் சகல சக்திகளும் வாசம் செய்வதாக புராணங்கள் கூறுகின்றன. இத்தகைய மஹிமைகள் வாய்ந்த ஸாளக்ராமங்களை இல்லம் தோறும் வைத்து பூஜித்து உலக நன்மையை வேண்டுவோமாக.


**பகலவன்.**


**வேதபாரதி செய்திகள் புத்தக வங்கி கணக்கு எண்கள் விபரம்**

**சந்தா விவரம்**

வருட சந்தா ரூ.200
10 வருட சந்தா ரூ.1500
வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI SEITHIGAL**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010246740 | IFSC : CIUB0000262**



# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்


## ஞானம் - சாந்தம்

அந்தக் காலத்தில் துராசையில்லை. மனுஷ்யர்கள் ஒருத்தருக்கொருத்தர் பாந்தவ்யமாக ஒட்டிக் கொள்கிறசின்னச் சின்ன சமூகங்களாக இருந்துவிட்டதால், இப்படிச் சேர்ந்திருப்பதே பெரிய இன்பம் என்று அவர்கள் கண்டு கொண்டார்கள். அதோடு மதத்தில் நம்பிக்கை, தெய்வத்திடம் பயபக்தி, தங்களுக்கென்று குலதெய்வங்கள், அதற்கான வழிபாடுகள் இருக்கின்றன என்றபெருமை, இதிலெல்லாம் நிறைந்து இருந்துவிட்டதால் அவர்களுக்கு வெளி வஸ்துக்களைத் தேடி மேலே மேலே இன்று தவிக்கிறதவிப்பு இல்லவே இல்லை. சமுதாயம் முழுவதும் நன்றாக இருந்தது.

பலவாகப் பிரிந்தாலும் ஸ்வாமியின் பெயரில் எல்லாரும் ஒன்று சேர்ந்திருந்தார்கள். அவரவர்க்கும் குலதெய்வம் இருந்தபோதிலும், ஊருக்குப் பொதுவாக பெரிய கோயில் இருந்தது. அந்தக் கோயிலும், அதன் உத்ஸவாதிகளுமே ஊர் வாழ்க்கையின் மைய ஸ்தானமாக இருந்தன. இதைச் சுற்றியே அதாவது பகவானின் பேரில், அத்தனை சமூகத்தாரும் அவன் குழந்தைகளாக ஒன்று சேர்ந்திருந்தார்கள். ஒரு தேர்த்திருவிழா என்றால் அக்ரகாரத்துக்காரனும், மற்றவர்களும் தோளோடு தோள் இடித்துக் கொண்டு வடம் பிடித்து இழுத்தார்கள். அந்த சௌஜன்யமான காலத்தை நினைத்தாலே மறுபடியும் அந்தகாலம் வேண்டும் என்று இருக்கிறது.

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை


## கர்ம யோகம்



சென்றமாத தொடர்ச்சி

அதர்ம காரியங்களில் ஒருவன் ஈடுபட்டிருந்தால், எதிர்காலத்தில் பலவித கஷ்டங்களை அவன் நரகத்திலோ அல்லது பூலோகத்திலோ அனுபவித்தாக வேண்டும். இப்படிப்பட்டவனுடைய நடத்தையை, தீயினால் சூழப்பட்ட வாசல் வழியே ஓடி வந்தவனுடைய நடத்தையோடு ஒப்பிடலாம். நல்ல புண்ணிய செயல்களைச் செய்பவன், சுவர்க்கத்தை அடைந்து இன்பத்தைப் பெறுவான் அல்லது மீண்டும் பூலோகத்திற்கே வந்து, நல்ல உயர் குலத்தில் பிறப்பான். எப்படியிருந்தாலும், அவன் மீண்டும் பிறவியெடுக்கத்தான் வேண்டும். இவ்வண்ணம், புண்ணியத்தை சம்பாதித்தவனுங்கூட சம்சார பந்தத்தில் சிக்கிக் கொண்டு துன்பப்படுகிறான். இப்படிப்பட்டவனுக்கு உதாரணமாக நாம் இரண்டாவது சகோதரனுடைய செயலை ஒப்பிட்டுக் கூறலாம். தீப்பிழம்போடு காட்சி தந்த வாசல் வழியே சென்றவனுக்கு எந்தவித முன்னெச்சரிக்கையும் தேவைப்படவில்லை. அதர்ம வழியில் செல்வதைப்போல, அது மிக சுலபமான வழியாகும். ஆனால், துன்பங்களினால் அவன் பிறகு வருத்தப்பட வேண்டியிருக்கும். தர்ம வழியில் செல்பவன் எப்படி தனது மனதையும் இந்திரியங்களையம் தன் வசத்தில் வைத்திருக்க முயற்சி செய்வானோ அப்படி இரண்டாவது வாசல் வழியே சென்றவன் சிறிது கஷ்டப்பட வேண்டியிருந்தது. தொடரும்...

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்



*3-8 வேதங்களில் விஞ்ஞான உண்மைகள் :*

*வேதங்களைஇயற்றியவர் யார் என்பது தெரியாது, அதன் சங்கீதக்கட்டு இன்று வரையில் கலையாமல் குலையாமல் இருந்து வருகிறது, வேதங்களின் விஸ்தாரம் கற்பனைக்கெட்டாதது, அவற்றில் முரண்பாடுகள் இல்லை என்பனவான வேதங்களின் நான்கு அம்சங்களை, இதுவரையில் கண்டோம். இப்பகுதியில் ஐந்தாவது சிறப்பம்சம் ஒன்றைக் காண்போம். சமீபத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க பல விஞ்ஞானக்கண்டுபிடிப்புகள் வேதங்களில் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கின்றன என்பதே அந்தச் சிறப்பு. அதற்கான சில முக்கியமான உதாரணங்களை இப்பொழுது பார்ப்போம்.*

*மனித மூளையின் இடப்பக்கமும் வலபக்கமும் ஒரே மாதிரியான தோற்றம் உடையனவென்றாலும் அவற்றின் செயல்பாடுகளில் மிகுந்த வேற்றுமை உள்ளது என்று, 1981 ம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற ரோஜர் ஸ்பெர்ரி என்பவர் கண்டுபிடித்தார். ஒருவனின் பேச்சு, நிகழ்வுகளின் காலத்தைப்பற்றிய விவரம், கணக்குகள் முதலியனவற்றை இடப்பக்கம் கவனித்துக்கொள்கிறது. வலப்பக்கம், காலம் இடம் ஆகியவற்றின் பூரண ஆய்வு செய்கிறது.*

*தொடரும்....*



# ஸ்ரீ சங்கரா இலவச முதியோர் இல்லம்

ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை (Regd.)
பண்டித மேடு, திருப்போரூர் அருகில்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன், ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை ஓர் இலவச முதியோர் இல்லத்தை திருப்போரூர் அருகில் உள்ள பண்டித மேடு கிராமத்தில் நிர்வகித்து வருகிறது. அங்கு 50 முதியவர்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர்; இந்த நிர்வாகம் உங்கள் ஆதரவை நாடுகிறது:

திருமண நாள், பிறந்த நாள், நினைவு நாள் போன்றவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து ரூ.3000/- அளித்தால் முதியோர் இல்லத்தின் ஒரு நாளின் செலவுக்கு ஆகும்.

தங்களுக்கு விருப்பமான தொகையை கீழ்க்கண்ட விலாசத்திற்கு "ஹிந்து சேவா சமாஜம் டிரஸ்ட்" **(HINDU SEVA SAMAJAM TRUST)** என்ற பெயரில் காசோலை அல்லது கணினி வழி வங்கி கணக்கு மூலமாக நேரடியாக அனுப்ப வங்கி கணக்கு எண்.: **914010003352646;** ஆக்ஸிஸ் பேங்க், துரைப்பாக்கம் கிளை, **IFS CODE : UTIB0001566** அனுப்பலாம். கணினி வழியாக அனுப்புவோர் அவசியம் பணம் அனுப்பிய விவரத்தை கீழ்காணும் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். செய்யவும். இவ்வுதவி செய்பவர்களுக்கு 80G பிரிவின்படி வரிச்சலுகை உண்டு.

**M. இராமகிருஷ்ணன்,** அறங்காவலர்
71, முதல் பிரதான சாலை, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
Cell : 93810 45601 | Email : amarabharathy7@gmail.com

FORM IV

Statement about ownership and other particulars about newpaper VEDABHARATHI SEITHIGAL as required to be published under Sec. 19--D Sub sec (b) of the Press and Registration of Books Act read with Rule 8 of the Registration of New Papers ( Central Rules ) 1956

| | | |
|---|---|---|
| 1 | Place of publication | Chennai |
| 2 | Periodicity of Publication | Monthly |
| 3 | Printer's Name<br>Nationality<br>Address | R.Gowthama Sankar<br>Indian<br>Sabanayakam Printers,<br>No 39, Millers Road,Kilpauk<br>Chennai- 600 010. |
| 4 | Publisher's name<br>Address | R.VENKATARAMAN<br>No 27, F-1 Pillaiyar Koil St,<br>Annai Indira Nagar,<br>Velachery,<br>Chennai- 600042 |
| 5 | Editor's Name<br>Nationality<br>Address | R.VENKATARAMAN<br>No. 31, Seshadripuram 7th Main Rd<br>Baby Nagar,<br>Velachery,<br>Chennai- 600 042 |
| 6 | Name and Address of News Papers and shareholders holding one percent of the total captial | VEDABHARATHI SEITHIGAL<br>No 27, F-1, Pillaiyar Kovil St.,<br>Annai Indira Nagar,<br>Velachery,<br>Chennai- 600042 |

I,R.Venkataraman, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.


Chennai - 600042 31-03-2024 ( Sd ) R.Venkataraman

# பூக்களோடு பேசுவாம்

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்“

## “மினி கைலாயம்” எனும் நாகலிங்கப் பூ

## பகுதி - 1



நம் தேசத்தில் புல், பூண்டு, பூ, பழம் என அனைத்தும் கடவுளுக்காகத்தான்! இறைவனே படைத்த இவைகளை, மனிதர்களாகிய நாம் இனம் பிரித்து இந்தெந்தகடவுளுக்கு, இவைதான் ஆகும் என்றும் இவைகள் ஆகாது என்றெல்லாம் கூடத்தீர்மானித்துக் கொண்டிருக்கிறோம்.

நமது தீர்மானங்களுக்கு ஆதரவாக புராணங்களையும், பண்டைய இலக்கியங்களையும் துணைக்கும் அழைத்துக் கொள்கிறோம். இந்நிலையில் “பூவே கடவுள்” என்று நாம் உணரும்படியாக சில பூக்களைபடைத்துவிட்டால் என்ன என்று சித்தம் கொண்டதினாலோ என்னவோ அப்படி சில மலர்களைப்படைத்துள்ளான் இறைவன். இவ்வகைப்பூக்களுக்குள்ளே தானே இறங்கி வந்து குடியிருந்துவிட்டான் இறைவன் என்றால் மிகையில்லை. அத்தகைய பெருமைக்குரிய மலர்களில் ஒன்றான “நாகலிங்கப்பூ”, மிக அழகிய தோற்றம் கொண்ட அற்புதமான மலர். பார்க்கப் பார்க்க பக்திப் பரவசம் ஏற்படுத்தும் மலர். இதனை “மினி கைலாயம்” என்று சிவபக்தர்கள் வெகுவாகக் கொண்டாடுகின்றனர்.

இந்த அதியச மலரில் நாகமுகமிருக்கிறது. உள்ளே லிங்கமும் இருக்கிறது. சுற்றிலும் தேவர்களும்,

தேவகணங்களும் இருக்கிறார்கள். இந்த மலரை நம் உள்ளங்களையில் வைத்துக்கொண்டு உற்று கவனித்தால், கைலாயமே நம் கைக்குள் வசப்பட்டுவிட்டது போல் உணருவோம். ஒரு சில நிமிடங்கள் நம் சிந்தனையை ஒரு முகப்படுத்தி, இந்த பூவின் மத்திய பகுதியில் இருக்கும் சிவலிங்கத்தை உற்று நோக்கி, அப்படியே நம்மை த்யான நிலைக்கு கொண்டு சென்று விட்டால், உடல் சிலிர்க்கும், உள்ளம் அமைதி பெறும். கைலாயம் கண்ணுக்குள் விரியும். சிவகுடும்பம் நெஞ்சை நிறைக்கும். ஒரே ஒரு நாகலிங்கப்பூவை வாங்கியோ, பறித்தோ உள்ளங்கையில் வைத்து முயற்சி செய்து பாருங்கள். கயிலை கண்ணுக்குத் தெரியவில்லை என்றால், உங்கள் மனம் உங்கள் வசம் இல்லை என்று புரிந்து கொண்டு, மீண்டும் மீண்டும் முயற்சி செய்யுங்கள். கயிலைமலையும், கைலாசபதியும் உங்கள் கைவசப்படும் என்பதில் சந்தேகமில்லை.



சிவபூஜைக்குரிய அஷ்ட மலர்களில் ஒன்றான இந்தப் பூ இடம் பெறவில்லை. “பூமிக்கு வந்த சிவ மலர்” இது என்பதாலோ என்னமோ இது விசேஷத் தன்மைகளை மட்டுமல்லாமல், மிக விசேஷமாகநாகபரணத்துடன் கூடிய சிவலிங்கவடிவத்தையே தன்னுள் கொண்டுள்ளது. பாம்புகள் விரும்பித் தஞ்சமடையும் மரமாக நாகலிங்க மரம் உள்ளது. விசேஷத்திலும் விசேஷமாக மரத்தில் பூக்கும் பூவாக, வேர் பகுதிக்கு சற்று மேலே, கொத்துக் கொத்தான இலைகளுடன் கூடிய கிளைகளில் பூக்காமல், தான் பூப்பதற்கென்றேபிரத்யேகமாக ஒரு கிளையை

உருவாகிக்கொண்டு, பூக்கும் மலராக இந்த கைலாய மலர் உள்ளது. நடுவில் சிவலிங்கமும், அதற்கு மேலே கொடை பிடித்தார் போல் நாகாபாரணமும், உள் மத்திய பகுதியில் சிவலிங்மும், அதனைச்சுற்றிலும் ரிஷி முனிவர்களும், தேவர்களும், தேவகணங்களுமாகத் தோற்றமளிக்கின்ற“சிவலோக மலராக” திவ்ய தரிசனம் தரும் தெய்வீக மலர் இந்த நாகலிங்க மலர். (படத்தில் இருக்கும் நாகலிங்க மரம் கோட்டூர்புரத்தில் உள்ள என் அடுக்குமாடி குடியிருப்பின் வாசலில் சாலையில் உள்ளது).

“ஷிவ்பூல்” என்றும், “கைலாசபதி” என்றும் வடநாட்டவர்களும் வெகுவாக கொண்டாடும் நாகலிங்கப் பூவை “நாகமல்லிப் பூ” என்றும், “மல்லிகார்ஜுனப்பூ” என்றும் தெலுங்கர்களும் பயபக்தியுடன் அழைத்துக்கொண்டாடுகிறார்கள். வங்காளமோ இதனை“நாகேஷ்வர்” என்கிறது.

எப்படி அழைக்கப்பட்டாலும் இந்தப்பூவே சிவனின் “மலர் அவதாரம்” எனும் படியான சிறப்பு அமைப்பைக் கொண்டுள்ளது இந்த மலர். நாகலிங்க மரத்தை யாரும் வளர்த்து உருவாக்கியதாகச் சொந்தம் கொண்டாடிவிட முடியாதபடி எங்கெல்லாம் தோன்றியிருக்கிறதோ அங்கெல்லாம் சுயம்புவாகவே (இது மிகையில்லை) தோன்றியுள்ளது என்கிறது தாவரவியல். இதற்கான ஆராய்ச்சிகள் இன்னும் முடிவடையவில்லையாம். நாகலிங்கமரத்திற்கு ஏனைய தாவரங்களைப் போல “சீசன்” எனப்படும் பருவகால மாற்றங்கள் கிடையாதாம். “என்றும் பசுமையான” மரம் என்று போற்றப்படுகிறது. இம்மலரின் இந்த குணங்கள் அனைத்துமே சர்வேஸ்வரனான சிவனுக்கும் பொருந்தும் தானே! இந்த மலரின் மேலும் பல சிறப்புகளைத் தொடர்ந்து பேசுவோம்.

நாகலிங்கபூ தொடரும்...

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 39

உங்கள் குழந்தைகள் ஏதோ ஒரு துறையை "பி.ஜி".க்காக தேர்ந்ததெடுத்தாகிவிட்டது. இனி அவர்களுடைய கனவு பணி மீது தான். ஏதாவது ஒரு "கார்ப்பரேட்" நிறுவனத்தில் கை நிறைய பணம், "டிப்-டாப்" டிரஸ், மத்தியதர வாழ்க்கை (அதாங்க "மிடில் கிளாஸ்!") என்றால் "ஐ.டி" கம்பெனி, கை நிறைய சம்பளம், வாழ்க்கை முழுவதும் கடன் அட்டை எனும் வாழ்க்கையைப் பற்றி யோசித்து வைத்துவிடுவார்கள்.

ஆனால் திடீரென்று ஒரு எண்ணம் இன்றைய இளைஞர்கள், இளைஞிகளிடம் ஏற்பட்டுள்ளது. இதை 'Sabbatical' என்று கூறுகின்றனர். இதற்கு பல நிறுவனங்கள் ஒத்துழைக்கின்றன.

அது என்ன Sabbatical? 'Sabbatical'என்றால் "ஓய்வு" என்று பொருள். "நான் 'Sabbatical' எடுக்கப் போகிறேன்" என்று கூறினால், "என்னது இந்த வயசுல ஓய்வா?" என்று பதறாதீர்கள்.

'Sabbatical' எனும் வார்த்தைக்கு உண்மையான பெயர் "ஓய்வினை விடுப்பு" என்று இன்றைய தமிழகராதி கூறுகிறது. "நான் என் படிப்பினை முடித்து விட்டேன். ஒரு வருஷம் 'Sabbatical' போய்விட்டு பிறகு வேலையில் சேர்கிறேன்" என்றால் அர்த்தம் என்ன? இதனுடைய அடிப்படை மனோதத்துவத்தை புரிந்து கொண்டால் பெற்றோர்களுக்கு புரியும்.

மூன்று வயதிலிருந்தே கற்றல், தூக்கம் போதாமை, வாயில் திணிக்கப்படும் அவசர உணவு, எல்லாவற்றையும் கற்று "ஆல்இன் ஆல்" அழகு ராஜா

அல்லது ராணியாக வலம் வர வேண்டும் எனும் பெற்றோரின் ஆசைக்கு சதா விரட்டப்படும் குழந்தைகளின் வாழ்க்கை படிப்பு முடித்த பிறகு உடனே வேலைக்கு சென்று அங்கு நிறுவனத்தின் கனவுக்காக ஓட வேண்டுமோ என்று தொடர்கிறது.

அன்று குடும்ப பொறுப்புகள் இருந்தன. அதனால் ஓய்வின்றி கூடப் பிறந்தவர்களின் பொறுப்பு, வேலைக்கு செல்லாத தன்னை நம்பி வந்த மனைவி, குழந்தைகளின் பொறுப்புகள், வயதான பெற்றோர்களின் பொறுப்பு, பிறகு ஓய்வெடுக்கலாம் என்றால் மனைவியின் உடல் உபாதை அல்லது தன்னுடைய உடல் பிரச்சனைகள், பேரக்குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் பணி என்றுள்ளது.

இன்று ஒற்றைஅல்லது இரண்டு குழந்தைகளை வளர்க்கையில் வீர, தீர, பிரதாபத்தோடு வளர்த்து விட்டு, “முடிவுகளை மட்டும் நான் எடுப்பேன்” எனும் பெற்றோர்கள் அதிகமாகி வருகின்றார்கள். “ஐயா, அப்படியே விட்டுவிட்டால் அவர்கள் கெட்டுப்போய் வேறு வழியில் சென்று விடுவார்கள்” எனும் பயம் பல பெற்றோர்களை தாக்குகின்றன.

இதன் காரணமாக ஒரு வித “மூளை ஓய்வு” தேவையாகின்றது. இப்பிரச்சனையை பல நிறுவனங்கள் ஏற்கின்றன. காரணம் அவர்கள் நிறுவனத்தில் சேர்ந்து விட்டால் இனி அந்நிறுவனம் தான் தன் பணியாளர்களிடம் முதன்மையாக இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றன. சம்பளம் எத்தனை உயர்வோ அத்தனை பணி அதிகம் என்பதை இன்றைய தலைமுறையினருக்கு நன்கு தெரியும்.

ஆகையால் ஒரு வருடம் ஓய்வு என்பதை தூங்கி, உண்டு கழிப்பதில்லை. “கன்யாகுமரி முதல் காஷ்மீர்

வரை அல்லது குறுக்காக கட்ச் முதல் மேற்கு வங்காளம் வரை என் “பைக்”கில் செல்கிறேன். இந்தியாவை பற்றி எனக்கு தெரிய வேண்டும்” என்று கிளம்புகிறார்கள். இதில் என்ன தவறு காண முடியும்?

பலர் “நான் படித்தது போதாது. எனக்கு “பிஹெச்.டி” செய்து முனைவர் பட்டம் பெறவேண்டும்” என்கின்றனர். படித்தவுடன் வேலை, ஒரே வருடத்திற்குள் திருமணம் என்பதெல்லாம் இன்று பெண்களிடம் கூட எடுபடுவதில்லை. மீறி திருமணம் செய்து வைத்தால், அது வெற்றிகரமாக இருப்பது சற்றே கவலைக்கிடமாக இருக்கின்றது.

3 வயதில் துவங்கும் கற்றல் 30 வயது வரை கூட தொடர்கிறது என்பதை இத்தகையவர்களின் பெற்றோர்கள் புரிந்து கொண்டால், ஒரு மூன்று மாதம் அல்லது 6 மாதம் அல்லது ஒரு வருடம் 'Sabbatical' என்று உங்களிடம் கூறினால், “அது என்ன? நீ என்ன செய்யப்போறே? நாங்க உனக்கு எப்படி உதவணும்னு சொல்லு?” என்று கேட்குமளவு இன்றையப் பெற்றோர்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த மாற்றத்திற்கு தயாராக வேண்டிய ஒரே காரணம் மூன்று வயதிலிருந்து உங்கள் பேச்சுக்கள், ஏச்சுக்கள், கோபங்கள், தாபங்கள், கனவுகள் என்று அனைத்தையும் “மார்க்” (மதிப்பெண்கள்) என்கிறஒரே அம்பின் மூலம் செலுத்தி, உங்கள் குழந்தைகளை, செதுக்கியிருக்கின்றீர்கள்.

கொஞ்சம் விலகி “எனக்கு புரியுதப்பா” என்றால் போதும் உங்கள் குழந்தைகள் அகமகிழ்ந்து அடுத்த ஒரு மாதத்திலேயே உங்களைத் தேடி வருவார்கள். பெண் குழந்தைகளாக இருந்தால் யார் துணைக்கு வருகிறார்கள். எத்தனை பேர் செல்கிறீர்கள் என்று பல

கேள்விகளை கேட்டு தெரிந்து கொண்டு தைரியமாக சிறிய பயணம், மலையேறுதல் (Trekking) என்று அனுப்புங்கள்.

**"ஆற்றின் நிலைதளர்ந் தற்றேவியன்புலம்**
**ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு".**
**(அதிகாரம் – 72 குறள் – 716)**

"பரந்த அறிவுடையவர்கள் முன்னால் குற்றமுண்டாகும்படிப் பேசுவது நன்னெறியில் நிற்பவர் அந்நெறியிலிருந்து தவறியதைப் போலாகும்" என்று வள்ளுவர் கூறுகிறார்.

தொடரும்..

## வருந்துகிறோம்

என்றும் நம் நினைவில் வாழும் ஸ்ரீமான்
N. ஜெயராம ஐயர் அவர்களைப் போற்றுவோம்
புதுவை வேதபாரதி அமைப்பின் பொறுப்பாளர்
Er. ஸ்ரீ NJL ரமேஷ்
அவர்களின் தந்தை
**T.R.பட்டினம் N. ஜெயராம ஐயர்**
19.02.2024 அன்று
பெரியவாள் பாதம்
சென்றடைந்தார்கள்.
தந்தையை இழந்த
வருத்தத்தில் வாடும்
NJL ரவி, Er. NJL ரமேஷ்,
NJL பாலாஜி மற்றும்
குடும்பத்தினருக்கு வேதபாரதி குழுமம் ஆழ்ந்த
வருத்தங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.
ஸ்ரீ N. ஜெயராம மாமா அவர்களின்
ஆன்மா சாந்தியடைய ப்ரார்த்திக்கிறோம்.



# தருவின் நிழலில்

## புரசு (ALBIZIA LEBBECK)

இம்மரத்தின் விதைகள் தட்டை வடிவிலிருக்கும், புரசு புனிதத்தன்மை உள்ள மரம் என்பதால் த்வைத வனத்திலும், இந்திரப்ரஸ்தாவிலும் வளர்க்கப்பட்டதாக "மகாபாரதம்" கூறுகிறது.

அந்தணர்களின் நித்ய கர்மாவில் ஒன்றான "ஔபாஸன" அக்னிக்கும், அதன் நீட்சியான பித்ரு கர்மா ச்ரார்த்த திவு ஹோமத்திற்கும் தர்வியாக புரசு இலையையே பயன்படுத்துகிறார்கள். இம்மரம் வீட்டில் வளர்க்கப்படுவதை விசேஷமாக முன்னோர்கள் கூறிச் சென்றுள்ளனர்.

"புரசு" நாகை மாவட்டம், திருத்தலைச்சங்காடு அருள்மிகு சௌந்திரநாயகி உடனுறை சங்காரண்யேஸ்வரர் திருக்கோவிலின் தல விருட்சமாகும். சங்கு புஷ்பங்கள் நிறைந்த காடாக இருந்ததால் "திருத்தலைச் சங்காடு" எனப்படுகிறது. இத்தலத்தின் தீர்த்தம் "சங்கு தீர்த்தமாகும்". இதில் பௌர்ணமியன்று நீராடுதல் சிறப்பானது. சோழநாட்டின் காவிரி தென்கரைத் தலங்களில் இது 45வது தலமாகும். சம்பந்தர், அப்பர் ஆகியோரால் பாடப்பெற்றஇத்தலத்தில்தான் எம்பெருமானை பூஜித்து "பாஞ்சசன்யம்" எனும் சக்தி வாய்ந்த சங்கினை திருமால் பெற்றதாக வரலாறு கூறுகிறது.

தமிழ் இலக்கியம் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள இத்திருக்கோவில் "கோச்செங்கட் சோழனால்" வலம்புரி சங்கு வடிவில் அமைக்கப்பட்ட மாடக்கோவிலாகும். இக்கோவிலின் வாசலில், உலகின் மகா கோடீஸ்வரர்களான "சங்கநிதியும்", "பதும நிதியும்"

தரிசிக்க வரும் பக்தர்களை வரவேற்கிறார்கள்.

ஸ்வேதாரண்யம் - திருவெண்காடு, வேதாரண்யம் - திருமறைக்காடு, சங்காரண்யம் - திருத்தலைச்சங்காடு, வில்வராண்யம் - திருச்சாய்க்காடு ஆகிய ஐந்து ஆரண்யக் கோவில்களில் இக்கோவிலும் ஒன்றாகும்.

“நலச்சங்க வெண்குழையும் தோடும்
பெய்தோர் நால்வேதம்
சொலச்சங்கை இல்லாதீர் சுடுகாடு
அல்லால் கருதாதீர்
குலைச் செங்காய்ப் பைங் கமுகின்
குளிர் கொள் சோலைக்குயிலாலும்
தலைச்சங்கைக் கோயிலே
கோயிலாகத்தாழ்த்தீர் — சம்பந்தர்

புரசு, தஞ்சை மாவட்டம், திருக்கருசனூர் அருள்மிகு கற்பகாம்பிகை சமேத அக்னீஸ்வரர் திருக்கோவிலுக்கும் தல விருட்சமாகும். கம்ஸபுரம், கம்சனூர், பராசரபுரம், அக்னிபுரம், முக்திபுரம், பலாசவனம், பிரம்மபுரி என்றும் அழைக்கப்படும் இத்தல தீர்த்தம் “அக்னி தீர்த்தமாகும்”.

நவக்ரஹங்களில் ஆறாவது நாயகரான “சுக்ரபகவானின்” தலமாகும். சுக்ரன் களத்ரகாரகன் என்பதனால், கருத்து வேறுபாடுள்ள தம்பதிகள் இங்கே சென்று சுக்ர பகவானை வழிபட அந்யோன்யம் அதிகரித்து கருத்து வேறுபாடுகள் களையப்பட்டு ஆனந்தமாக வாழலாம்.

**- ஆதிரையன்.**

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- ❖ Breast Pumps
- ❖ Blood Glucose Meters
- ❖ BP Meters
- ❖ Alpha Beds
- ❖ Adult Diapers
- ❖ Under Pads
- ❖ Wheel Chairs
- ❖ Physio Products
- ❖ Home Sleep Study
- ❖ Oxygen Concentrator
- ❖ CPAP / Bi Pap
- ❖ Pulse Oxymeters
- ❖ Nebuliser
- ❖ Morning Walker
- ❖ Weighing Scale
- ❖ Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

## இராமாயணம் தரும் படிப்பினை

*சென்றமாத தொடர்ச்சி...*

*ரிஷிகள், முனிவர்கள் தங்கிவிட்டு இனி பஞ்சவடி என்றஇடத்தில் தங்க முடிவு செய்கின்றனர். அங்கு இராமர் காட்டிய இடத்தில் இலக்குவன் பர்ணசாலை அமைக்கிறான். அந்தக் குடிலை அமைத்த லட்சுமணனை ராமர் பாராட்டினார். "இந்தக் கலையை எங்கு கற்றுக்கொண்டாய். மிகத் திறம்பட குடிலை அமைத்திருக்கிறாய்" என்றார். குரு குலத்தில் அந்த நாட்களில் பாடம் மட்டும் அல்லாமல் வாழ்க்கைக்கு த் தேவையான அத்தனை கலைகளையும் கற்றுக் கொடுத்துவிடுவார்கள். ஆய கலைகள் 64 என்பார்கள். அத்தனையும் சொல்லிக் கொடுப்பார்கள். பண்டைய நாட்களில் நமது கல்விமுறைஇப்படித்தான் நல்ல முறையில் இருந்தது. பிரம்மச்சரிய வாழ்க்கை முதல் சன்யாச வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை விஷயங்களையும் கற்றுக் கொடுத்து விடுவார்கள். கொஞ்ச காலம் மூவரின் வாழ்க்கை லட்சுமணர் அமைத்த குடிலில் ஆனந்தமாகக் கழிந்தது. இப்படியே போய்க்கொண்டிருந்தால் இராமனின் அவதார நோக்கம் எப்படி நிறைவேறும். அயோத்தியில் முடி சூட்டும் நேரத்தில் மந்திரையைக் காரணமாகக் கொண்டு கைகேயியால் அது நிறுத்தப்பட்டது. அதனால் ஸ்ரீராமர் வனவாசம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. சில அரக்கர்களை அழித்தார். பிறகு பஞ்சவடியில் சூர்ப்பனகை என்றஅரக்கி மூலம் ஸ்ரீராமரின் அவதார நோக்கம் விரிவடையப் போகின்றது.*

*குடிலில் தங்கள் வேலைகளை முடித்தபிறகு தினமும் மூவரும் நல்ல புராண விஷயங்களைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்வார்கள். ஒருநாள்*

அவ்வாறு செய்து கொண்டிருக்கும் போது இராவணனின் தங்கை சூர்ப்பனகை வந்தாள். வந்தவள், தான் இராமனிடம் காதல் வயப்பட்டதாகக் கூறினாள். அப்போது ராமன் நான் திருமணம் ஆனவன், என் மனைவி தான் இவள் என்று சீதையை அறிமுகப்படுத்துகிறான். பிறகு இலட்சுமணனைச் சுட்டிக்காட்டி இவன் தனியாகத்தான் இருக்கிறான். நல்ல அழகு உனக்குத் தகுந்த கணவன் அவன் தான், எந்தவித இடையூறும் இன்றி அவனைத் திருமணம் செய்து கொள் என்றான். அப்போது சூர்ப்பனகை இலக்குவனிடம் வந்து திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்டாள். அவன் அவளிடம் நானே அடிமை, நீ அசுரவேந்தன் இராவணன் தங்கை. என்னைத் திருமணம் செய்து கொண்டு என்ன சுகம் கிடைக்கும் என்றான். இதனால் கோபமடைந்த சூர்ப்பனகை இந்தப் பெண் சீதை இருப்பதால் தான் இந்த சகோதரர்கள் நம்மை பந்தாடுகிறார்கள். அதனால் சீதை மீது பாய்ந்து அவளை விழுங்க முயற்சி செய்தாள். உடனே இலட்சுமணன் அவள் மீது பாய்ந்து காது, மூக்கை வெட்டி அங்கஹீனம் செய்தான். ஒரு பெண்ணை இவ்வாறு செய்யலாமா? என விமர்சகர்கள் பேசலாம். சூர்ப்பனகை சாதாரணப் பெண் அல்ல. திட்டமிட்டே மூவருக்கும் தொந்தரவு கொடுக்கப் பிறந்தவள். அதன் பிறகு ஜனஸ்தானத்தில் கரண், தூஷணன் உட்பட அனைவரும் இராம பாணத்தால் மடிந்தனர். அதில் அகம்பணன் என்பவன் மட்டும் பிழைத்தான். அவன் சூர்பனகைக்கு நேரிட்ட விபத்து அரக்கர்கள் அழிந்து போன விபரத்தை இராவணனிடம் கூறினான்.

தொடரும்...

**- காந்தாமணி நாராயனன்**

## அதிருத்ர மஹா யக்ஞம் - 2024

பூஜ்யஸ்ரீ பரமானந்த ஸ்வாமிகள் அனுக்ரஹத்தோடு பூஜ்யஸ்ரீ நெரூர் ஸ்ரீ வித்யா ஸங்கர சரஸ்வதி ஸ்வாமிகள் வழி காட்டுதலில் ஊரப்பாக்கம் ஸ்ரீசங்கர வித்யாலயா பள்ளியில் நிர்வாகிகள் ஆதரவோடு அதிருத்ரவைபவம் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26, 27, 28 தேதிகளில் வெகு விமரிசையாக நடைபெற்றது. 26ம் தேதி காலை குடந்தை ஸ்ரீ கைலாச கனபாடிகள் மற்றும் உள்ளூர் வேத விற்பன்னர்களுடன் கணபதி ஹோமம் மற்றும் மைலாப்பூர் முல்லைவாசல் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் தம்பதியினர் சங்கல்பம் செய்து கொண்டு அதிருத்ர மஹன்யாசம் ஆரம்பிக்கப்பட்டது. முதலாவதாக கோபூஜை நடைபெற்றது. ஆதனூர் ஸ்ரீ நீலகண்டேஸ்வர ஸ்வாமி கோவிலில் இருந்து அழைத்து வரப்பட்டு ஸ்வாமி, அம்பாள் விக்ரஹங்களுக்கு அலங்காரம் செய்வித்து ஆராதனை செய்யப்பட்டது. தொடர்ந்து வேதபாரதி வித்யார்த்திகள் ஸுக்தங்கள், ருத்ர ஜெபம் ஜபித்து ஆரம்பம் செய்தனர். மாலை 4.30 மணியளவில் ஊரப்பாக்கம், மறைமலை நகர் மகளிர் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம பாராயணம் செய்து, ஸ்வாமி புறப்பாடு செய்வித்து அனைவரும் ஊர்வலமாக நெரூர் ஸ்வாமிகள் தலைமையில் யாகசாலை பிரதட்சணமாக அரங்கம் வந்தடைந்தோம். தொடர்ந்து தோடகாஷ்டகம், ஸ்வாமிகள் அனுக்ரஹ பாஷனத்துடன் வேதபாரதியின் யுவஸ்ரீ குழந்தைகள் பஜனை பாடல்கள் 1½ மணி நேரம் சிறப்பாக நடத்தினர். மாலை நேரத்தில் வந்திருந்த அன்பர்கள் விருப்பப்படி ஸ்ரீ ருத்ர பாராயணம் நடைபெற்றது. வந்திருந்த அனைவருக்கும் பல்லாவரம் பாலு மாமா

குழுவினரால் சிறப்பாக ஆகாரம் செய்விக்கப்பட்டது.

27.02.2024 சனிக்கிழமை காலை பேருந்து மூலம் அழைத்துவரப்பட்ட ரித்விக்குகள் 6.30 மணி முதல் வரத்துவங்கி அவரவர் பெயர்களை பதிவு செய்து கன வரிசையில் அமர்ந்து மஹன்யாச பாராயணம் செய்ய ஆரம்பித்தனர். 8.00 மணி அளவில் அனைவருக்கும் கஞ்சி, பழம் கொடுத்து உபசரித்தனர். மற்றபார்வையாளருக்கும், பள்ளி ஆசிரியர்கள், ஊழியர்கள், வேதபாரதி தன்னார்வலர்களுக்கு சிற்றுணவு தனியாக வழங்கப்பட்டது. பாண்டிச்சேரி வேதபாரதி குழுவினர் பொறுப்பேற்று செம்மையாக நடத்தினர். மேற்கு மாம்பலம் ஸ்ரீ மூர்த்தி அவர்கள் மரகத லிங்க விக்ரஹம் எடுத்துவந்து ரூத்ர ஜபம் நடைபெறும் போது பூரண அபிஷேகம் சிறப்பாக செய்தனர். வேதபாரதி நிறுவன தலைவர் திருப்பூர் ஆடிட்டர் ஸ்ரீமான் T.R. ராமநாதன் அவர்களும், சென்னை வேளச்சேரி ஆரம்பம் முதல் வழிநடத்திவரும் ஸ்ரீ D. சூர்யநாராயணன் மாமாவும் கலந்து கொண்டு கௌரவித்தனர்.

ஸ்ரீரத்னகிரீஸ்வரர் ருத்ர கமிட்டி, பல்லாவரம் ஸ்ரீருத்ர கமிட்டி ஸ்மார்ட் குழுவினர் திரளாக வந்திருந்து சுமார் 700 நபர்கள் ஸ்ரீருத்ர பாராயணம் செய்தனர். அனைவரும் திரவிய சஹாயம் செய்து ஒத்துழைப்பு நல்கினர். நெமிலிச்சேரி சிவா பாடசாலை வித்யார்த்திகள் கலந்து கொண்டனர். ரித்விக்குகள் அனைவருக்கும் உட்காரவைத்து உணவு பரிமாறப்பட்டது. மாலையில் அங்கேயே தங்கியிருந்த வித்யார்த்திகளால் ஸ்ரீ கைலாச கனபாடிகள் தலைமையில் ஸ்ரீருத்ர பாராயணம் நடைபெற்றது. வேலூர் கணேச வாத்யார் மறுநாள் ஸ்ரீருத்ர ஹோமம்

செய்வதற்காக 11 ஹோம குண்டங்கள், திரவிய ஏற்பாடுகள் செய்து ஹோமம் சிறப்பாக நடைபெற வழிகாட்டினார்கள்.

28.02.2024 ஞாயிற்றுக்கிழமை முந்தைய நாள் போலவே ரித்விக்குகள்– வாகன உதவியால் காலை 6.30 மணிமுதல் வரத்துவங்கினர். சுமார் 600 பேர் வந்து கௌரவித்தனர். மஹன்யாசம், ஸ்ரீருத்ர ஜபம், ஸ்ரீருத்ர ஹோமம், அபிஷேகம் முதலியன நடைபெற்றன. காலையில் விக்ரஹங்களுக்கு சிறப்பு அலங்காரம் செய்விக்கபட்டது. நெரூர் ஸ்வாமிகள் காலை 9.00 மணியளவில் கலந்து கொண்டு அனுக்ரஹ பாஷணம் செய்தார்கள். மைலாப்பூர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் தம்பதியினர் மூன்று நாட்களும் வந்திருந்து கௌரவித்தனர்.

வேதபாரதி அங்கத்தினர்கள் அனைவரும் கடந்த இரண்டு மாதங்களாக திட்டமிட்டு அனைத்து பொறுப்புகளையும் சிறப்பாக நடத்தி கொடுத்தனர். திருநெல்வேலி, திருச்சி, கோவை, திருப்பூர், தர்மபுரி, மதுரை, கும்பகோணம், ஒசூர், பாண்டி, கரூர், பெங்களூர் போன்றஅனைத்து கிளைகளிருந்தும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பாக நடைபெற மிகுந்த ஆதரவை அளித்தனர். அனைவரது குடும்ப உறுப்பினர்கள் நலம் பெறநல்லாசிகளுடன் வேதபாரதி வேண்டிக்கொள்கிறது.

ஆசிரியர்.

---

ஆதனூர் **ஸ்ரீ நீலகண்டேஸ்வரர் ஸ்வாமி கோவிலில் 10.03.2024 ஞாயிறு** அன்று மாலை 4.30 மணிக்கு வேதபாரதியின் **ருத்ர பாராயணம்** நடக்க உள்ளது. அனைவரையும் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, 32, Ground Floor, Raja Nagar, 1st Main Road, Neelangarai, Chennai - 600 115.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org

## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்



*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*


*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CITY UNION BANK
City Union Bank introduces
" Voice Biometric Authentication"
in CUB All in One Mobile Banking App
in Association with
KAIZEN VOIZ
simple·seamless·secure
DRBT
Explore, Enable, Excel
VOICE
BIOMETRIC
"Your voice is your password"

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/24-26
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/24-26
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th March 2024





வாழ்க்கையில் எத்துனை துன்பங்களை கடந்த போதிலும்
அதிலிருந்து மீள்வதற்கும், நம்பிக்கை பெறுவதற்கும்
இருப்பது மழலையின் சிரித்த முகம் ஒன்றே...

தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ்®

287, 288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன் : 0421 2241829

97862 41829 www.suryajewellers.co.in

To

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.